29th April 1960]

Basic Education

* 878 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப் பாரா—

(அ) அகில இந்திய ரேடியோ கல்வி ஒலிபரப்பில் ஆதாரக் கல்வி இணைப்பு பாடபோதனை ஒலிபரப்பப்படுகிறதா?

(ஆ) இல்லையானல், இதை ஒலிபரப்ப அரசாங்கம் வேண்டு வன செய்யுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) No, Sir.

(ஆ) No action by Government is considered necessary.

SRI A. VEDARATHNAM: இந்த ஆதாரக் கல்வி முறை வேறு எந்த நாட்டிலும் இல்லாத காரணத்தாலும், நமது நாட்டில் தான் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதாலும், தொழிலைக் கல்வி யோடு சேர்த்து போதிக்கின்ற முறையை எல்லா இடங்களிலும் இருப்பவர்களும் அறிந்து கொள்ளக்கூடிய முறையில் ரேடியோ நிலையங்கள் மூலமாக பரப்பினால் இதை மற்றவர்களுக்கு தெரிவிப் பதற்கு மிகவும் உதவியாக இருக்குமல்லவா? ஆகவே அரசாங்கம் இதை கவனித்து, இதற்கு ரேடியோ நிலையங்களில் இடம் அளிக்க ஏற்பாடு செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI. C. SUBRAMANIAM: மத்திய அரசாங்கம் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் என்று நம்புகிறேன்.

House Rent allowance for teachers

* 879 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government received any petition from the Teachers' Guild, Madras, in December 1959 regarding the payment of the house rent allowance with retrospective effect in view of the high cost of living; and

(*b*) if so, the steps taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Yes, Sir.

(*b*) No action was considered necessary pending receipt of the report of the Pay Commission.

SRI N. K. PALANISAMI: ஸார், இந்த பிரைவேட் மானேஜ் மென்ட் பள்ளிகளில் இருக்கிற ஆசிரியர்களுக்கு கவர்ன்மென்ட் அல்லது கார்ப்பரேஷன் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்கள் வாங்கும் சம்பளத்தை விட குறைவாக கொடுத்து வருவதினாலும் சர்க்கார் இதைப்பற்றி பல வருடங்களாக ஆராய்ந்து வருவ தினாலும், பே கமிஷன் ரிப்போர்ட் பற்றி பரிசிலனை செய்யும்போது இவர்களைப்பற்றி சற்று அனுதாபத்துடன் கவனித்து தக்க நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI. C. SUBRAMANIAM: பல வருடங்களாக பொறுத்திருந்தவர்கள் இன்னும் சில மாதங்கள் பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.